TNPD110000632020

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கந்தர்வகோட்டை.**
**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**
**ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 25/2020**
**வழக்கின் சுருக்கம்**

<table>
<tr><td>1.</td><td>எதிரி நீதிமன்ற காவலில் இருந்த காலம்</td><td>எதிரி 07.06.2019 அன்று கைது செய்யப்பட்டு, அன்றைய தினமே நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.</td></tr>
<tr><td>2.</td><td>இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td>17.12.2020</td></tr>
<tr><td>3.</td><td>குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்</td><td>17.02.2021</td></tr>
<tr><td>4.</td><td>தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம்</td><td>அரசு தரப்பில் BNSS பிரிவு 348ன் படி CMP. No. 150/2026ல் தாக்கல் செய்யப்பட்ட மனு 25.02.2026ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது</td></tr>
<tr><td>5.</td><td>அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td><table>
<tr><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1– 03.01.2024</td><td>03.01.2024</td></tr>
<tr><td>அ.சா.2– 30.09.2025</td><td>30.09.2025</td></tr>
<tr><td>அ.சா.3– 24.02.2026</td><td>24.02.2026</td></tr>
<tr><td>அ.சா.4– 24.02.2026</td><td>24.02.2026</td></tr>
<tr><td>அ.சா.5– 25.02.2026</td><td>25.02.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>6.</td><td>BNSS பிரிவு 351(1) ஆ இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>04.03.2026</td></tr>
</table>



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:20:31 +0530

| | | |
|---|---|---|
| 7. | எதிரி தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்: | இல்லை |
| 8. | தலைமறைவு எதிரி பற்றிய விவரம் | இல்லை |
| 9. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கபட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | இல்லை |

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:20:36 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வகோட்டை**

**முன்னிலை: திரு. நா.சிவபழனி, B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை.

**2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07ஆம் நாள் சனிக் கிழமை**

திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் மாசி திங்கள் 23ம் நாள்

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 25/2020**

**(CNR NO-TNPD 11000063-2020)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சிசி. எண். 25/2020 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | கந்தர்வக்கோட்டை நிலையம்,<br>குற்ற எண்.131/2019 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்,<br>கந்தர்வக்கோட்டை காவல் நிலையம், |
| 4 | **<u>எதிரியின் விபரம்</u>**<br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | ஆனந்த், வயது 24/2019<br>த/பெ. தவமணி,<br>அரிசன தெரு,<br>அரவம்பட்டி,<br>கந்தர்வகோட்டை தாலுகா,<br>புதுக்கோட்டை மாவட்டம். |
| 5 | தேதி நாள்<br>சம்பவம் | 22.05.2019 |
| 6 | முறையீடு | 23.05.2019 |
| 7 | கைது | 07.09.2019 |
| 8 | பிணையில் விடுவித்தல் | 07.09.2019 |
| 9 | விசாரணை துவக்கம் | 03.01.2024 |
| 10 | விசாரணை முடிவு | 25.02.2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, எதிரி சட்டப்பிரிவு 304-A இதசவின் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து , எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | -- |
| 13 | காலதாமதத்திற்கான விளக்கம் | அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரிக்க காலதாமதம் |



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:20:44 +0530

இவ்வழக்கானது 17.12.2020 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 07.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசுக்காக **அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர்** அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.M.ஜெயந்தன், B.Sc., B.L.,** அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

கடந்த 22.05.2019ம் தேதி இவ்வழக்கில் இறந்துபோன ராம்குமார் என்பவர் TN 51 X 4057 என்ற பதிவெண் கொண்ட Hero Honda CD 100 இருசக்கர வாகனத்தில் முள்ளிகாப்பட்டி சென்றுவிட்டு, திரும்ப வீட்டிற்கு வருவதற்காக கந்தர்வக்கோட்டை – கறம்பக்குடி சாலையில் உள்ள நெப்புகை கிராம சருக்கையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது, எதிரி மேற்படி அதே சாலையில் எதிரே TN 49 BH 9671 என்ற பதிவெண் கொண்ட Yamaha FZS இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று மேற்படி ராம்குமார் ஓட்டி வந்த வண்டியின் மீது மோதியதில் அவருக்கு தலையில் பலத்த காயத்தை ஏற்படுத்தி அதன் மூலம் அவருக்கு மரணத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது பிரிவு 304–A இதசவின் கீழ் கந்தர்வக்கோட்டை காவல் உதவி ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது, எதிரிக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.


SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.07 17:20:50 +0530

4. குற்றச்சாட்டு :–

அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரி குற்றம் புரிந்திருப்பார் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால், எதிரிக்கு எதிராக பிரிவு 304–A இதசவின் கீழ் குற்றத்தின் சாராம்சங்கள் குறித்து எதிரிக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார். எனவே இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 13 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

6. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 நாகராஜ் என்பவர் கடந்த23.05.2019ம் தேதியன்று கந்தர்வகோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி–11 திருமேனி என்பவரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார் வாக்குமூலத்தைப் பெற்ற காவல் உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண்.131/2019ல், சட்டப்பிரிவுகள் 304–A இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.4கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். பின்னர் வழக்கின் கோப்பினை மேல்விசாரணைக்காக பட்டியல் சாட்சி–12 காவல் ஆய்வாளர் தினேஷ்குமார் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

7. காவல் ஆய்வாளர் வழக்கின் கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 23.05.2019ம் தேதி மதியம் 01.00 மணியளவில் சம்பவ இடம் சென்று அ.சா.2 முத்துகுமார் மற்றும் அ.சா.4 இளங்கோவன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:20:55 +0530

செய்துள்ளார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.3 செந்தில்குமார் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார்.

8. பின்னர் காவல் ஆய்வாளர் கடந்த 23.05.2019ம் தேதியன்று தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று, அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இவ்வழக்கில் இறந்துபோன ராம்குமார் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் மதியம் 01.30 மணி முதல் 03.00 மணி வரை பிரேத விசாரணை செய்து அ.சா.ஆ. 7 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். சாட்சிகளை விசாரணை செய்ததில் வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரியை தேடிவந்த நிலையில், 07.06.2019ம் தேதி மதியம் 01.00 மணியளவில் தாமாக நிலையம் ஆஜரான எதிரி ஆனந்த் என்பவரை காரணம் கூறி கைது செய்து, உரிய நடைமுறைக்கு பின் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் வழக்கின் கோப்பினை மேல்விசாரணைக்காக பட்டியல் சாட்சி–13 காவல் ஆய்வாளர் சிங்காரவேல் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

9. புதுக்கோட்டை வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் பட்டியல் சாட்சி–9 செந்தாமரை என்பவர் வழக்கு விபத்தை ஏற்படுத்திய Yamaha FZS இருசக்கர வாகனம் மற்றும் விபத்துக்குள்ளான Hero Honda CD 100 இருசக்கர வாகனம் ஆகியவற்றை ஆய்வு செய்து அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் வழங்கியுள்ளார்.

10. பட்டியல் சாட்சி–10மருத்துவர் தமிழ்மணி என்பவர் வழக்கில் இறந்து போன ராம்குமார் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்து அ.சா.ஆ. 10 பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கியுள்ளார். மேற்படி அ.சா.ஆ.8 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களுக்கு எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்படவில்லை என்பதால், குவிமுச பிரிவு 294(3)இன் கீழ் மேற்படி ஆவணங்கள் புலன் விசாரணை அதிகாரியின் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் காவல் ஆய்வாளர் வழக்கின் விசாரணையை முடித்து, வழக்கு கோப்பினை பார்வையிட்டு எதிரிக்கு எதிராக



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:21:09 +0530

சட்டப்பிரிவுகள் 304–A இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார். அ.சா.5 வனிதா கந்தர்வகோட்டை காவல் நிலைய காவல் ஆய்வாளர் வழக்கு கோப்பினை பார்வையிட்டு வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

11. இத்துடன் அரசுத் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

12. அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(ஆ) –ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**13. விவாதம்:–**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத் தரப்பில் எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**14. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்தவிதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:21:16 +0530

## தீர்வு

15. இருதரப்பும் கேட்கப்பட்டது அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

16. அரசு தரப்பில், கடந்த 22.05.2019ம் தேதி இவ்வழக்கில் இறந்துபோன ராம்குமார் என்பவர் TN 51 X 4057 என்ற பதிவெண் கொண்ட Hero Honda CD 100 இருசக்கர வாகனத்தில் முள்ளிகாப்பட்டி சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வருவதற்காக கந்தர்வக்கோட்டை – கறம்பக்குடி சாலையில் உள்ள நெப்புகை கிராம சருக்கையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்துகொண்டிருந்தபோது, எதிரி மேற்படி அதே சாலையில் எதிரே TN 49 BH 9671 என்ற பதிவெண் கொண்ட Yamaha FZS இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று மேற்படி ராம்குமார் ஓட்டி வந்த வண்டியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி அவருக்கு மரணத்தை ஏற்படுத்தியதாக எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

17. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 நாகராஜ் என்பவர் கடந்த23.05.2019ம் தேதியன்று கந்தர்வகோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி–11 திருமேனி என்பவரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார் வாக்குமூலத்தை பரிசீலனை செய்ததில், அ.சா.1, அ.சா.3 செந்தில்குமார் ஆகிய இருவரும் கடந்த 22.05.2019ம் தேதி அவரது நண்பர் ஒருவரின் திருமண நிகழ்சிக்காக அழைப்பிதழ் கொடுப்பதற்கு முள்ளிக்காப்பட்டியில் உள்ள ராசு கோனார் என்பவர் வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் சென்று அழைப்பிதழ் கொடுத்துவிட்டு நின்றுக் கொண்டிருந்தபோது, மதியம் சுமார் 2 மணியளவில் அ.சா.1இன் அண்ணன் மகன் ராம்குமார் என்பவர் TN 51 X 4075 என்ற பதிவெண் கொண்ட Hero Honda CD 100 இருசக்கர வாகனத்தில் ராசு கோனார் மகன் சதீஷ்குமார் என்பவரை சந்திக்க வந்ததாக கூறிவிட்டு, கந்தர்வக்கோட்டை செல்வதற்காக அவர்களுக்கு முன்பாக மேற்படி இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும், பின்னால் சுமார் 400 அடி தூரத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.3 சென்றுக்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:21:24 +0530

கொண்டிருந்தாகவும், ராம்குமார் நெப்புகை பிரிவு ரோட்டில் உள்ள சருக்கையில் சென்றுக் கொண்டிருந்தபோது, எதிரே இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் மேற்படி ராம்குமார் ஓட்டிச் சென்ற வாகனத்தில் மோதியதில் ராம்குமார் அடிப்பட்டு கீழே விழுந்துவிட்டதாகவும், தாங்கள் ஓடிபோய் தூக்கினோம் என்றும், எதிரே எதிரி ஓட்டி வந்த TN 49 BH 9671 என்ற பதிவெண் கொண்ட Yamaha FZS இருசக்கர வாகனத்துடன் கீழே விழுந்து கிடந்ததாகவும், பின்பு எதிரியை விசாரித்தபோது, கந்தர்வக்கோட்டை அருகில் உள்ள அரவம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த அரிசனத் தெரு தவமணி மகன் ஆனந்த் என்று தெரிந்து கொண்டதாகவும், அப்போது எதிரி வண்டியை எடுத்துக் கொண்டு தப்பித்து ஓடிவிட்டதாகவும், பின்னர் ராம்குமாரை தூக்கி பார்த்தபோது, தலை, முகம், காது ஆகிய இடங்களில் இருந்து ரத்தம் கொட்டியதாகவும், உடனே அருகில் உள்ளவர்கள் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து முதல் உதவி பெற்று பின்பு மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தாகவும், அங்கு சிகிச்சையில் இருந்த ராம்குமார் 23.05.2019ம் தேதி நள்ளிரவு 2 மணியளவில் இறந்துவிட்டதாகவும் குறிப்பிட்டு புகார் வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

18. வழக்கு சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் கொடுத்துள்ள நாகராஜன் என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், சுமார் 4 வருடத்திற்கு முன்பு, ஒருநாள் முள்ளிகாப்பட்டிக்கு பத்திரிக்கை வைப்பதற்காக சென்றிருந்ததாகவும், தனது அண்ணன் மகனும் முள்ளிகாப்பட்டிக்கு உறவினரை பார்ப்பதற்காக வந்திருந்தார் என்றும், தனது அண்ணன் மகன் இருசக்கர வாகனத்தில், முள்ளிகாப்பட்டியிலிருந்து கந்தர்வக்கோட்டை நோக்கி வந்தார் என்றும், விபத்து ஏற்படுத்திய நபர், நெப்புகையில் இருந்து இருசக்கர வாகனத்தில் வந்தார் என்றும், மோதி கிடந்ததாக சொன்னார்கள் என்றும், தான் 108 ஆம்புலன்சிஸ்க்கு போன் செய்து, கந்தர்வக்கோட்டை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும், அவருக்கு தலை மற்றும் கை, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது என்றும், சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டதாக தெரிந்து கொண்டேன் என்றும், இது தொடர்பாக புகார் வாக்குமூலம்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:21:31 +0530

கொடுத்தேன் என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

19. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.3 செந்தில்குமார் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 22.05.2019 ஆம் தேதி அ.சா.1 இன் நண்பரின் திருமணத்திற்கு பத்திரிக்கை வைப்பதற்காக தானும், அ.சா.1ம் தனது இருசக்கர வாகனத்தில் முள்ளிக்காப்பட்டி கிராமத்திற்கு சென்றோம் என்றும், தாங்கள் முள்ளிக்காப்பட்டி கிராமத்தில் உள்ள ராசுக்கோனார் என்பவர் வீட்டில் மதியம் சுமார் 02.00 மணியளவில் இருந்த போது, ராம்குமார் இருசக்கர வாகனத்தில், சதிஸ் என்பவரை பார்ப்பதற்கு வந்திருப்பதாக கூறினார் என்றும், பின்னர், அங்கிருந்து கந்தர்வக்கோட்டைக்கு சென்றார் என்றும், தாங்களும் அங்கிருந்து கிளம்பி அவருக்கு பின்னால் சுமார் 400 அடி தூரத்தில் வந்தோம் என்றும், தாங்கள் நெப்புகை சறுக்கை அருகில், வேலாடிப்பட்டியில் இருந்து கந்தர்வக்கோட்டை செல்லும் சாலையில், கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தோம் என்றும், தங்களுக்கு முன்பாக ராம்குமார் TN 51 X 4075 என்ற பதிவெண் கொண்ட CD 100 இருசக்கர வாகனத்தில், அதே சாலையில், அதே திசையில் சாலையின் இடது புறமாக சென்று கொண்டிருந்தார் என்றும், அப்போது மதியம் சுமார் 02.30 மணி இருக்கும் என்றும், தங்களுக்கு எதிர் திசையில் வந்த TN 49 BH 9671 என்ற பதிவெண் கொண்ட Yamaha FZ என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து, ராம்குமார் மீது மோதி விட்டார் என்றும், அதனால் இருவரும் கீழே விழுந்துவிட்டார்கள் என்றும், தானும், அ.சா.1ம் ராம்குமாரை தூக்கி பார்த்த போது, அவரது தலையிலும் காதிலும் முகத்திலும் காயம் இருந்தது என்றும், விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தினை ஓட்டிவந்த நபருக்கும் காலில் காயம் இருந்தது என்றும், மேற்படி விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபரைப் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும் என்றும், அந்த தற்போது நீதிமன்றத்தில் இல்லை என்றும், அவரது பெயர் ஆனந்த் என்று தெரியும் என்றும், பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக கந்தர்வக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு காயம்பட்ட



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:21:39 +0530

ராம்குமாரை சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம் என்றும், அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், அங்கு சிகிச்சையில் இருந்த ராம்குமார் கடந்த 23.05.2019 ஆம் தேதி, சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும், விபத்தை தான் நேரடியாக பார்த்தேன் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

20. பார்வை மகஜர் சாட்சியாக அ.சா.2 முத்துக்குமார் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் வேலாடிப்பட்டியில் இருந்து கந்தர்வக்கோட்டைக்கு வந்து கொண்டிருந்தபோது, முள்ளிக்காப்பட்டியில் முனியன் கோவில் பாலம் அருகில், நின்று கொண்டிருந்த போலிசார் அங்கு நடந்த விபத்து சம்மந்தமாக, தனக்கு தெரியுமா என்று கேட்டார்கள் என்றும், தற்போது நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது என்றும், போலிசார் தன்னிடம் விபத்து சம்மந்தமாக விசாரித்துக் கொண்டு அதற்காக தன்னிடம் கேட்டதற்காக கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். **பார்வை மகஜரிலுள்ள அ.சா.ஆ.2இன் கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

21. மற்றொரு பார்வை மகஜர் சாட்சியாக அ.சா.4 இளங்கோவன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 23.05.2019 ஆம் தேதி, மதியம் சுமார் 12.30 மணியளவில் தானும், முத்துக்குமார் என்பவரும் இருசக்கர வாகனத்தில் கந்தர்வக்கோட்டைக்கு வந்து கொண்டிருந்தபோது, நெப்புகை சறுக்கை அருகில், போலிசார் அங்கு முன்தினம் நடைபெற்ற விபத்து சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு, வரைபடம் வரைந்தார்கள் என்றும், பார்வை மகஜரில் தானும், முத்துக்குமாரும் கையொப்பம் செய்தோம் என்றும், தற்போது நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:21:48 +0530

22. அ.சா.5 காவல் ஆய்வாளர் வனிதா வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில், உதவி ஆய்வாளர் திருமேனி கடந்த 23.05.2019ம் தேதியன்று கந்தர்வக்கோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது, கோவிலூர் மேல தெருவை சேர்ந்த நாகராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று வழக்கு பதிவு செய்துள்ளது குறித்தும், வழக்கின் கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் தினேஷ்குமார் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளது குறித்தும், காவல் ஆய்வாளர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடம் சென்று சாட்சிகள் இளங்கோவன் மற்றும் முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளது குறித்தும், பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளது குறித்தும், தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று, வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்துபோன ராம்குமார் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்துள்ளது குறித்தும், எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளது குறித்தும், வழக்கின் கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் சிங்காரவேல் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளது குறித்தும், காவல் ஆய்வாளர் சிங்காரவேல் என்பவர் விபத்து ஏற்படுத்திய மற்றும் விபத்துக்குள்ளான வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் செந்தாமரை என்பவரை விசாரித்து வாக்கமூலம் பெற்று மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றுள்ளது குறித்தும், தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று இறந்து போன ராம்குமார் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் தமிழ்மணி என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வந்தது குறித்தும், வழக்கு விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

23. வழக்கு விபத்து சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் கொடுத்துள்ள நாகராஜ் என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அரசு தரப்பு வழக்கில் வழக்கு விபத்தில்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:21:57 +0530

இறந்துபோன ராம்குமார் என்பவர் TN 51 X 4057 என்ற பதிவெண் கொண்ட Hero Honda CD 100 இருசக்கர வாகனத்தில் முள்ளிகாப்பட்டி சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வருவதற்காக கந்தர்வக்கோட்டை – கறம்பக்குடி சாலையில் உள்ள நெப்புகை கிராம சருக்கையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது, இவ்வழக்கின் எதிரி மேற்படி அதே சாலையில் எதிரே TN 49 BH 9671 என்ற பதிவெண் கொண்ட Yamaha FZS இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று ராம்குமார் ஓட்டி வந்த வண்டியின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்திலும் அவ்வாறே கூறப்பட்டுள்ளது. ஆனால், அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் 4 வருடத்திற்கு முன்பு, ஒருநாள் முள்ளிகாப்பட்டிக்கு பத்திரிக்கை வைப்பதற்காக சென்றிருந்ததாகவும், தனது அண்ணன் மகனும் முள்ளிகாப்பட்டிக்கு உறவினரை பார்ப்பதற்காக வந்திருந்தார் என்றும், தனது அண்ணன் மகன் இருசக்கர வாகனத்தில், முள்ளிகாப்பட்டிக்கு கந்தர்வக்கோட்டை நோக்கி வந்தார் என்றும், விபத்து ஏற்படுத்திய நபர், நெப்புகையில் இருந்து இருசக்கர வாகனத்தில் வந்தார் என்றும், மோதி கிடந்ததாக சொன்னார்கள் என்றும், தான் 108 ஆம்புலன்சிஸ்க்கு போன் செய்து, கந்தர்வக்கோட்டை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும், அவருக்கு தலை மற்றும் கை, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது என்றும், சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக தெரிந்து கொண்டேன் என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

24. வழக்கு விபத்து சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.3 செந்தில்குமார் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். புகார் வாக்குமூலத்தில் அ.சா.1ம் அவரது நண்பரான அ.சா.3 செந்தில்குமார் என்பவரும் நெப்புகை பிரிவு ரோட்டில் உள்ள சருக்கை அருகே சென்று கொண்டிருந்தபோது விபத்து நடைபெற்றதாக கூறப்பட்டுள்ளது. அ.சா.3 தனது சாட்சியத்தில் வழக்கு விபத்து சம்பவத்தை நேரில் பார்த்தாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.3 ஆகிய இருவரும் ஒரே இருசக்கர வாகனத்தில் சென்றபோது வழக்கு விபத்து சம்பவத்தை பார்த்தாக குறிப்பிட்டுள்ள நிலையில், அ.சா.1 தனது சாட்சியத்தில், தனது அண்ணன் மகன்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:22:06 +0530

அடிப்பட்டு கிடப்பதாக தகவல் அறிந்து சென்றுப் பார்த்ததாக அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு வழக்கிலும் அ.சா.1இன் சாட்சியத்திலும் அ.சா.3 வழக்கு விபத்து சம்பவத்தின்போது அ.சா.1 உடன் இருந்ததாக கூறப்பட்டுள்ள நிலையில், அ.சா.1 மற்றும் அ.சா.3 ஆகியோரின் சாட்சியம் ஒன்றுக்கொன்று முரணாக அமைந்துள்ளது.

25. அ.சா.3 வழக்கு விபத்து சம்பவத்தை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வழக்கு விபத்து சமயத்தில் விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் இருந்தபோதும், விபத்து ஏற்படுத்திய நபர் நீதிமன்றத்தில் இல்லை என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

26. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.3 ஆகியோரின் சாட்சியம் ஒன்றுக்கொன்று முரணாக அமைந்துள்ளதாலும், மேற்படி சாட்சிகளின் சாட்சியம் எதிரியை வழக்கு சம்பவத்துடன் தொடர்புப்படுத்துவதாக அமையவில்லை என்பதாலும், எதிரி தான் வழக்கு விபத்து சமயத்தில் விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தினார் என்பதை நிரூபிக்க அரசுத் தரப்பில் போதிய சாட்சியங்கள் முன்னிறுத்தப்படவில்லை என்பதால், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**27. முடிவாக, எதிரி சட்டப்பிரிவுகள் 304–A இதசவின் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து , எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:22:13 +0530

28. வழக்கு சொத்துக்கள் ஏதும் இல்லை. எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 07.03.2026ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:22:20 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை.**

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்:-</u>**

| **அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை** | **சாட்சிகளின் பெயர்** | **சாட்சிகளின் விபரம்** |
|---|---|---|
| அ.சா.1 | திரு. நாகராஜ் | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. முத்துக்குமார் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.3 | திரு. செந்தில்குமார் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு. இளங்கோவன் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.5 | செல்வி. வனிதா | கூடுதல் சாட்சி (காவல் ஆய்வாளர்) |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| **சான்று ஆவணங்களின் வரிசை** | **தேதி** | **சான்றாவணங்களின் விபரம்** | **யாரால் நிரூபிக்கப்பட்டுள்ளது** |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 03.01.2024 | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 30.09.2025 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.2இன் கையொப்பம் | அ.சா.2 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.3 | 24.02.2026 | பார்வை மகஜர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.4 | 25.02.2026 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.5 | 25.02.2026 | பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. | அ.சா.5 |
| அ.சா.ஆ.6 | 25.02.2026 | மாதிரி வரைபடம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.7 | 25.02.2026 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.8 | 25.02.2026 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.9 | 25.02.2026 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.10 | 25.02.2026 | பிரேத பரிசோதனை அறிக்கை | அ.சா.5 |

**அரசுத்தரப்பு சான்று பொருட்கள்:** இல்லை

**எதிரியின் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்:** இல்லை.

**குறிப்பு**

1. எதிரி 07.06.2019 அன்று கைது செய்யப்பட்டு, அன்றைய தினமே நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3.இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் இல்லை.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:22:24 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**